TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075231

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறை விதி 154 இன் கீழ்)

C

1. District / மாவட்டம்: சேலம் PS / காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு Year / ஆண்டு: 2021 FIR No / மு.த.அ. எண்: 15/AC Date: 28.09.2021

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 12 r/w 7(a)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் — Date from / நாள் முதல்: 27.09.2021 Date to / நாள் வரை: 28.09.2021
Time Period / நேர அளவு — Time from / நேரம் முதல்: 17.30 Hrs Time to / நேரம் வரை: 04.00 Hrs
(b) Information Received at PS Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 28.09.2021 Time / நேரம்: 12.00 Hrs.
(c) General Diary Reference Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Time / நேரம்:

4. Type of Information Written/ Oral: / தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number / முறைக் காவல் எண்: (b) Address / முகவரி: சார் பதிவாளர் அலுவலகம், சூரமங்கலம், சேலம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த காநி.பெயர் District : / மாவட்டம்

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர்: R. சந்திரமௌலீஸ்வரன் (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர்:
(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு: (d) Nationality / நாட்டினம்: (e) Passport No / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்:
Date of Issue / வழங்கப்பட்ட நாள்: Place of Issue / வழங்கப்பட்ட இடம்:
(f) Occupation / தொழில்: (g) Address / முகவரி: ஆய்வுக்குழு அலுவலர்-1, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

விபரம் தனிதாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| 14. Signature / Thumb Impression of the Complainant / Informant<br>குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /<br>பெருவிரல் இரேகைப் பதிவு | N. Narendran 28.09.2021<br>Signature of the Officer in-charge, Police Station<br>காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் |
| 15. Date & Time of despatch to the court<br>நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்<br>28.09.2021 - 14.15 Hrs. | Name பெயர் N'Narendran.<br>Rank நிலை .................... No எண் ..........<br>Inspector of police,<br>V&AC, Salem |

ATTACHMENT TO COLUMN NO 12 OF FIRST INFORMATION REPORT IN SALEM DETACHMENT CRIME NO 15/AC/2021.

| **Accused** | | |
|---|---|---|
| A-1 | திருமதி.R.இந்துமதி,<br>சார்பதிவாளர்,<br>சூரமங்கலம்,<br>சேலம். | சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் நா.நரேந்திரன் ஆகிய நான் இன்று 28.09.2021 ம் தேதி காலை 11.00 மணிக்கு அலுவலகத்தில் இருந்தபோது சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆய்வுக்குழு ஆய்வாளர் –1 திரு.R.சந்திரமௌலீஸ்வரன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.R.சந்திரமௌலீஸ்வரன், ஆய்வுக்குழு ஆய்வாளர் - I, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் பெறுநர் |
| A-2 | திரு.A.கேசவன், த/பெ.அப்பாவு,<br>அய்யம்பெருமாம்பட்டி,<br>ராமகவுண்டனூர்,<br>சேலம்–2. | |
| A-3 | திரு.K கோவிந்தன்,த/பெ.குப்பன்,<br>தண்டாம்பாளையம் அஞ்சல்,<br>தண்டராம்பட்டு வட்டம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | |
| A-4 | திரு. P. மணிவாசகம், த/பெ.பூமாலை,<br>கதவு எண்.70, சோளியூர்,<br>எம்.காளிப்பட்டி அஞ்சல்,<br>மேட்டூர் வட்டம்,<br>சேலம் மாவட்டம். | |

காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம் அய்யா, சேலம் மாநகரம், சேலம் வட்டம், ஜாகீர் அம்மாபாளையம் மெயின்ரோட்டில் இயங்கி வரும் சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் ஆர்.இந்துமதி மற்றும் சார்பதிவாளர் அலுவலகப் பணியாளர்கள், பத்திரப்பதிவு, திருமணப்பதிவு, வில்லங்க சான்று நகல் வழங்குதல், பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச்சான்றிதழ் வழங்குதல் மற்றும் அந்த அலுவலகத்தில் செய்ய வேண்டிய இதர பணிகளுக்காக தங்களது அலுவலகம் வரும் பொது மக்களிடம் கையூட்டு கேட்டு பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் பேரில் 27.09.2021 ஆம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலர்களுடன் இணைந்து சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. தணிக்கையின்போது, அந்த அலுவலகத்தில் இருந்த தனிநபர் திரு.கோவிந்தன் என்பவர் ஏற்கனவே சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் மேட்டூர் அணை சோளியூர் M. காளிப்பட்டி க.எண்.70/5–29யை சேர்ந்த

திரு.மணிவாசகம் என்பவரது பெயரில் கிரையம் செய்யப்பட்ட சேலம் போடிநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள புல எண். 25/8 ல் செவ்வாய்பேட்டை ஸ்ரீ வேணுகோபால சுவாமி கோவிலுக்கு சொந்தமான 1049 ச.அடி நிலம் மற்றும் அந்த நிலத்தில் உள்ள வீட்டினை திருவண்ணாமலை ஊரக வளர்ச்சி துறையில் உதவி பொறியாளராக பணிபுரியும் திரு.கேசவன் பெயருக்கு பத்திரம் பதிவு செய்து கொடுப்பதற்காக அவர் சொன்னதன்பேரில் ரூ.4,84,000/–த்தை சார்பதிவாளருக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்துள்ளதாக தெரிவித்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டு கட்டுகளை சோதனைக் குழுவினர் எண்ணிப் பார்த்ததில் 100 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் அடங்கிய ரூ.2,00,000/– ஒரு கற்றையாகவும், 32 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் அடங்கிய ரூ.64,000/– ஒரு கற்றையாகவும், தலா 100 ஐநூறு ரூபாய் நோட்டுகள் அடங்கிய ரூ.50,000/– வீதம் நான்கு கற்றைகளும், 40 ஐநூறு ரூபாய் நோட்டுகள் அடங்கிய ரூ.20,000/– ஒரு கற்றையாகவும் ஆக மொத்தம் ரூ.4,84,000/– இருந்தது. அந்த தொகை சார்பதிவாளருக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அதன்பிறகு, அந்த அலுவலகத்தில் இருந்த திரு.P.மணிவாசகம் என்பவரும் மேற்படி திரு.கேசவன் அவர்கள் சொன்னதன் பேரில் தன்னுடைய பெயரில் ஏற்கனவே கிரையம் செய்யப்பட்டுள்ள மேற்படி நிலத்தை திரு.கேசவன் பெயரில் பத்திரப்பதிவு செய்துகொடுப்பதற்காக திரு.கேசவன் தனக்கு கொடுத்த பணம் என்று தெரிவித்து ரூ.19,510/– த்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுகளை சோதனைக் குழுவினர் எண்ணிப் பார்த்ததில் 39 ஐநூறு ரூபாய்கள் அடங்கிய ரூ.19,500/– ஒரு கற்றையாகவும், ஒரு 10 ரூபாய் ஆக மொத்தம் ரூ.19,510/– இருந்தது. மேற்படி இரண்டு தொகைகளும் தணிக்கை குழுவினரால் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி திடீர் தணிக்கையின்போது சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கீழ்கண்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது.

| | |
|---|---|
| 1) | சேலம் மேற்கு மாவட்டப் பதிவாளர் அலுவலக ந.க.எண். 7278/ஆ5/2020 நாள் 16.2.2021 தேதியிட்ட கடிதம் பக்கங்கள் 1 மற்றும் 2 வரை. |
| 2) | சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக ந.க.எண்.129/2021 நாள் 7.5.2021 தேதியிட்ட கடிதத்தில் வங்கி வரைவோலையாக கொடிநாள் நிதி வசூல் தொகை ரூ.40,000/– செலுத்தப்பட்டதற்கான விபரங்கள் அடங்கிய கடிதம் பக்கங்கள் 1 முதல் 6 வரை. |

| | |
|---|---|
| 3) | சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக ந.க.எண்.129/2021 நாள் 12.7.2021 தேதியிட்ட கடிதத்தில் வங்கி வரைவோலையாக கொடிநாள் நிதி வசூல் தொகை ரூ.25,000/– செலுத்தப்பட்டதற்கான விபரங்கள் அடங்கிய கடிதம் பக்கங்கள் 1 முதல் 6 வரை. |
| 4) | சேலம் மேற்கு மாவட்டப் பதிவாளர் அலுவலக ந.க.எண். 1356/ஆ5/2021 நாள் 19.2.2021 தேதியிட்ட கடிதம் பக்கங்கள் 1 மற்றும் 2 வரை. |
| 5) | சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக ந.க.எண்.130/2021 நாள் 19.4.2021 தேதியிட்ட கடிதத்தில் வங்கி வரைவோலையாக காசநோய் வில்லைகள் விற்பனை செய்யப்பட்டு ரூ.4,000/–த்திற்கான வரைவோலை எண். 156150 நாள் 19.4.2021 க்குண்டான கடிதம் பக்கங்கள் 1 முதல் 6 வரை. |
| 6) | திரு.கேசவன் என்பவரது பெயரில் 27.09.2021 ஆம் தேதி சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.6419/2021 த்தின் சான்றொப்பமிட்ட நகல். |
| 7) | சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக வருகைப் பதிவேடு 2021 |
| 8) | சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக இயக்கப்பதிவேடு 2021 |
| 9) | சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக கற்றுக்காவல் பதிவேடு |
| 10) | சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக கேமரா ஆப்ரேட்டர் வருகைப் பதிவேடு |

மேற்படி தணிக்கையின்போது சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த மேற்படி தனிநபர்கள் திரு.K.கோவிந்தன் மற்றும் திரு.P மணிவாசகம் ஆகியோர்களது வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கை குறிப்பு, பெறப்பட்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்து ஆகியவைகளையும், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.5,03,510/– உடன் தங்களிடம் ஆஜர் செய்கிறேன். மேற்படி நிகழ்வின்போது அந்த அலுவலகத்தில் திரு.கேசவன், அவரது தந்தை அப்பாவு, கேசவனின் நண்பர்கள் இருவர் உடன் இருந்தனர். மேற்படி தொகை ரூ.5,03,510/– சார்பதிவாளர் திருமதி.ஆர்.இந்துமதி அவர்கள் மேற்படி நிலத்தை திரு.A கேசவன் அவர்களின் பெயரில் பத்திரப்பதிவு செய்துகொடுப்பதற்காக அவர் தனது அலுவல் பணியை ஆற்றுகையில் நேர்மையற்றமுறையிலும், முறையற்றவகையிலும் செயல்பட்டு அவர்களிடம் இருந்து கையூட்டுபெற முயற்சித்துள்ளார். அதற்காக அவர்களை மேற்படி பணத்துடன் தனது அலுவலக வளாகத்திற்குள் காத்திருக்க அனுமதித்துள்ளார். திரு.A கேசவன், திரு.K.கோவிந்தன் மற்றும் திரு.P.மணிவாசகம் ஆகியோர் சார்பதிவாளர் திருமதி.R இந்துமதி அவர்களுக்கு கையூட்டாக பணம் கொடுக்க உடந்தையாக செயல்பட்டுள்ளார்கள் என நம்புவதற்கு போதுமான முகாந்திரம் உள்ளது. ஆகவே,

திருமதி.R இந்துமதி, திரு.A.கேசவன், திரு.K.கோவிந்தன் மற்றும் திரு.P மணிவாசகம் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/- xxxx (R சந்திரமௌலீஸ்வரன்).

Sir, Received the above computer report and I registered a case in Salem Vigilance and Anti – Corruption Cr.No.15/2021 u/s 7 (a) and 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 28.09.2021 at 12.00 hrs. Sd/- xxx (N.Narendran) 28.09.2021 Inspector of Police, V&AC, Salem.

Original FIR along with original computer typed report of Tr.R.Mouleeswaran, Inspection Cell Inspector- I, Collectorate, Salem is submitted to the Hon'ble Special Judge for the Trail of cases under the Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti- Corruption, Chennai.

N. Narendran 28.09.2021

(N.NARENDRAN)
Inspector of Police,
Vigilance and Anti- Corruption,
Salem.